# மின் வியாபாரம்

## E-commerce




**2019 onwards**

**New syllabus**

**Advanced Level**

**Sri Lankan**


# *மின் வர்த்தகம்* (e-business )

- மின் வர்த்தகம் என்பது, இணையம் மற்றும் உலகளாவிய வலையமைப்பு போன்ற இலத்திரனியல் முறைமையைப் பயன்படுத்தி நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கிடையே பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குகின்ற மற்றும் விற்பனை செய்கின்ற செயற்பாடு ஆகும்.

## மின் வியாபாரம் ( e-commerce)

- மின் வியாபாரம் என்பது, தனியே பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குகின்ற மற்றும் விற்பனை செய்கின்ற செயற்பாடு மட்டுமின்றி, வாடிக்கையாளர் சேவை, சந்தைப்படுத்தல், மின்பரிமாற்றங்கள் போன்ற அனைத்துமாகும்.

## ❖ **e-commerce vs e-business**




## ❖ ***பிரபலமான மின் வியாபாரம்  தளங்கள்***

- Mattel
- eBay
- Alibaba.com
- Barbie
- amazon.com

## Bricks and Clicks

1. Bricks business model – offline
2. Clicks business model – online

Bricks – *பாரம்பரிய கடை*

Click – mouse click (online)

❖ ***<u>மின் வணிகத்தில் முக்கிய பங்களிப்பாளர்கள்</u>***

- வாடிக்கையாளர் / நுகர்வோன். (Customer / consumer)
- வங்கி (Bank )
- வியாபாரம் ( Merchant |Business| Seller )
- பணப்பரிமாற்ற இடைத்தரகர் Eg: PayPal

## PayPal

PayPal என்பது, ஓர் மின்வர்த்தக வியாபாரமாகும். (பணக்கொடுப்பனவு இடைத்தரகர்) இது இணையத்தளத்தினூடாக பணக்கொடுப்பனவுகள் மற்றும் பணப்பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கு அனுமதிக்கின்றது.

## மின் வர்த்தக மாதிரிகள் / சேவைகள்

- ❖ B2B - Business to Business
  - ✓ வியாபாரத்திலிருந்து வியாபாரம்
- ❖ B2C - Business to Consumer
  - ✓ வியாபாரத்திலிருந்து நுகர்வோன்
- ❖ C2B – Consumer to Business
  - ✓ நுகர்வோனிலிருந்து வியாபாரம்
- ❖ C2C – Consumer to Consumer
  - ✓ நுகர்வோனிலிருந்து நுகர்வோன்
- ❖ G2C – Government to Citizen
  - ✓ அரசாங்கத்திலிருந்து பிரஜை
- ❖ G2B – Government to Business
  - ✓ அரசாங்கத்திலிருந்து வியாபாரம்
- ❖ B2E – Business to Employees
  - ✓ வியாபாரத்திலிருந்து ஊழியர்கள்

❖ **B2C**

- தனிப்பட்ட நுகர்வோனுக்கு வியாபாரம் ஒன்றினால் இணையத்தினூடாக பொருட்கள், சேவைகளை விற்றல்.

(www.sampath.lk)

❖ **B2B**

- வியாபாரம் ஒன்றிற்கு இன்னொரு வியாபாரம் ஒன்றினால் தொடரறா(Online) முறைமையில் பொருட்கள், சேவைகளை விற்றல்.

(www.amazon.com)

❖ **C2C**

- தனிப்பட்ட நுகர்வோனுக்கு இன்னொரு நுகர்வோனால் இணையத்தினூடாக பொருட்கள், சேவைகளை விற்றல்.

(www.ebay.com)

- **C2B**
  - வியாபாரம் ஒன்றிற்கு தனிப்பட்ட நுகர்வோனால் இணையத்தினூடாக பொருட்கள், சேவைகளை விற்றல்.

- **G2B**
  - வியாபா நிறுவனங்களுக்கு அரசாங்கம் ஒன்றினால் இணையத்தினூடாக வழங்கப்படும் தகவல் மற்றும் சேவைகள்.

- **G2C**
  - தனது பிரஜைகள் மற்றும் அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையே இணையத்தினூடாக மேற்கொள்ளப்படும் தொடர்பாடல் இணைப்பு.

  Eg-பரீட்சை பெறுபேறினை அரசு வெளியிடல்

- **B2E**
  - வியாபார நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கு இணையத்தினூடாக பொருட்கள், சேவைகளை வழங்குதல்.

  Eg -தொடரறா முறைமையில் காப்புறுதி சேவைகளை ஊழியருக்கு வழங்குதல்.

## வாடிக்கையாளர் பெறும் நன்மைகள்

- 24/7 மணிநேர சேவை.
- எங்கிருந்து வேண்டுமானாலும் பொருட்கள், சேவைகளைப் பெறல். (Home, Office, Travel)
- சர்வதேச சந்தையினைப் பெறல்.
- இலகுவான / விரைவான பணக்கொடுக்கல் வாங்கல்.
- மின்வர்த்தக பிரயோகம் அதிக தெரிவுகளை வழங்குவதுடன் பொருட்களின் விரைவான விநியோகத்தினையும் வழங்குகின்றது.
- மின் வர்த்தகம் மெய்நிகர் (Virtual Auction) ஏல வசதியினை வழங்குகின்றது.
- வாடிக்கையாளர் பொருட்கள் பற்றிய கருத்துக்களை (Review Comment) வழங்கமுடிதல்.
- மின் வர்த்தக பிரயோகம் அதிக தெரிவுகளை ஒப்பீடு செய்வதற்கு வழங்குதுடன் மலிவான பொருட்களின் தெரிவுகளையும் வழங்குகிறது.

## வணிகத்திற்கு கிடைக்கும் நன்மைகள்

- வாடிக்கையாளருக்கு 24/7 சேவை.
- சர்வதேச சந்தையினைப் பெறல்.
- இலகுவான / விரைவான பணக்கொடுக்கல் வாங்கல்.
- வாடிக்கையாளருக்கு பொருட்கள் மற்றும் சேவைகள் பற்றி விரைவாக அறியத்தர முடிதல்.
- மின் வர்த்தகம் கடதாசி அடிப்படையிலான வேலைகளைக் குறைக்கின்றது.
- மின் வர்த்தகம் சிறந்த வாடிக்கையாளர் சேவைகளை வழங்குவதற்கு உதவுகின்றது.

## மின் வணிகத்தின் வரம்புகள்

- இணையம் போன்ற ICT கருவிகளை அனைத்து வாடிக்கையாளரும் பயன்படுத்தாமை.
- பொருட்கள், பணத்துக்கான பாதுகாப்பு பிரச்சினைகள்.
- பொருட்களின் அனுபவத்தினை நேரடியாக பெறுவதற்கு வழி இல்லாமை.

## *மின் சந்தைப்படுத்தல் ( e-marketing)*

- மின் சந்தைப்படுத்தல் என்பது இணையத்தினூடாக பொருட்கள் மற்றும் சேவைகளை சந்தைப்படுத்துவதைக் குறிக்கின்றது.

## *பாரம்பரிய சந்தையுடன் ஒப்பிடும்போது மின் சந்தையின் நன்மைகள்*

- ஒரே நேரத்தில் பாரியளவு எண்ணிக்கையான நுகர்வோனை அடையமுடிதல்.
- நேரடியாக விளம்பரப்படுத்துகின்ற குறிப்பிட்ட பொருட்களை வாடிக்கையாளர் அணுக முடிகின்றமை.
- புவியியல் ரீதியான எல்லைகள் காணப்படாமை.
- பொருட்கள், சேவைகளைப் பெறுவதில் காணப்படக் கூடிய நெகிழ்ச்சித்தன்மை.
- பொருட்கள், சேவைகளை நேரடியாக விற்றல் வாங்குதல்.

## Secure Electronic Transaction (SET)

- இணையம் போன்ற பாதுகாப்பற்ற வலையமைப்பினூடாக கடனட்டையின் பரிமாற்றங்களை பாதுகாப்பதற்கான செம்மைநடப்பு ஒழுங்காகும்.(Protocol)

## Shopping cart

- Shopping cart என்பது வலைச்சேவையகத்தின் மீதுள்ள ஓர் மின்வர்த்தக மென்பொருளாகும். அது இணையத்தின் மீது வாடிக்கையாளர் கொள்வனவிற்கான பொருட்களைத் தெரிவு செய்வதற்கு அனுமதிக்கின்றது.
- கொள்வனவு செய்வதற்கான பொருட்களை வாடிக்கையாளர் ஒன்று சேர்ப்பதற்கு அனுமதிக்கின்றது.
- கட்டளையிடப்பட்ட பொருட்களுக்கான மொத்த தொகையினை கணிக்கிறது.(Shipping charge, tax, packing charge, etc...)

## இலத்திரனியல் பணப்பரிமாற்ற முறைமைகள்

- Credit card - கடன் அட்டை
- Debit card - வரவட்டை
- Smart card - சிமாட் அட்டை
- e-cash / e- wallet

## மெய்நிகர் கடைமுகப்புக்கள்

- தொடரறா முறையில் பொருட்களைத் தேடி, கட்டளையிட்டு அவற்றிற்கான கட்டணங்களை செலுத்துவதற்கு அனுமதிக்கின்ற ஓர் வலைக்கடப்பிடம் ஆகும்.
- இணையத்தளத்தினூடாக 3ம் தரப்பின் வியாபாரங்கள் (ஏனைய வியாபாரங்கள்) அவற்றின் பொருட்களையும், சேவைகளையும் விற்பதற்கு வாய்ப்பளித்து விற்பனைப் பெறுமானத்தின் ஒரு குறித்த சதவீதத்தை கட்டணமாக அறவிடல்.

## *உள்ளடக்க வழங்குனர்* (content provider)

- உள்ளடக்க வழங்குனர் (content provider) என்பது தொடரறா முறையின் மூலம் பெறத்தக்க நிதமும் புதுப்பிக்கப்படும் செய்திகள், புளொக்குகள் (Blogs) காணொளிகள் போன்றவற்றை வழங்குதல்(Youtube).

## *இணைய சேவை வழங்குனர்* ( Online service provider )

- இணைய சேவை வழங்குனர் (Online service provider) என்பது, ஒரு மின்னஞ்சல் வழங்குனர், செய்தி வழங்குனர் (பத்திரிகை), பொழுதுபோக்கு வழங்குனர் (இசை, திரைப்படம்), தேடு பொறி, மின் வர்த்தகம் தொடரறா வங்கித்தளம், சுகாதாரத்ளம் உத்தியோகபூர்வ வலைத்தளம், சமூக ஊடகம் போன்றவையாக இருக்க முடியும்.

## மெய்நிகர் சமூகம் ( Virtual community)

- ஒரு மெய்நிகர் சமூகம் குறிப்பிட்ட சமூக ஊடகங்கள் மூலம் தொடர்புபடுத்தும் தனிநபர்களின் ஒரு சமூக வலையமைப்பாகும். பரஸ்பர நலன்களை, இலக்குகளை அடையும் பொருட்டு புவியியல் மற்றும் அரசியல் எல்லைகளை கடந்து செயற்படும்.

Eg:- Facebook(social media)

e-commerce side

News groups

## தொடரறா சந்தை இடம்(Online market place)


- நுகர்வோர் பரிமாற்றங்கள் வியாபார செயற்பாட்டாளர்களின் வலைவாயில்(Web portal) மூலம் செயற்படுத்தப்படுகின்றன. பின்னர் பங்குபெறும் சில்லறை விற்பனையாளர்கள், மொத்த விற்பனையாளர்களால் வழங்கப்பட்டு பூர்த்தி செய்யப்படுகின்றன.

## வணிகத்தில் I.CT.யின் அச்சுறுத்தல்கள் மற்றும் வாய்ப்புகள்

- தரவு அந்தரங்கம் - Data privacy
- பாதுகாப்பு - Security
- தயாரிப்பு வர்த்தகமயமாக்கல் - Product Commercialization

## பின்னோக்கிய ஏலம் ( Reverse auction)

- கொள்வனவாளருக்கு பொருட்களையும், சேவைகளையும் விற்பதற்காக விற்பனையாளர்கள் ஒருவரோடு ஒருவர் இணையத்தைப் பயன்படுத்தி போட்டியிடுதல் மற்றும் அவ்விற்பனையாளர்கிடையே குறைந்த விலை கோரப்படுகின்றமையில் விலைகள் பொதுவாக குறைதல்.



## குழுக்கொள்வனவு (Group purchasing)

- உறுப்பினர்கள் கூட்டு கொள்முதல் சக்தி அடிப்படையில் இணையத்தில் விற்பனையாளர்களிடமிருந்து பொருட்களுக்கான தள்ளுபடிகளை பெறல்.

## இலக்கமுறை பொருளாதாரம் (Digital Economy)

- இலக்கமுறை பொருளாதாரத்தில்(Digital economy) பின்வரும் வகையிலான வியாபார நிறுவனங்கள் காணப்படுகின்றன.
  - ✓ Pure brick
  - ✓ Brick and click
  - ✓ Pure click

## வலைவாசல் (Web portal)

- வலைவாசல் என்பது, ஒரு வலைக்கடப்பிடம் ஆகும். அது பல்வேறுபட்ட மூலகங்களிலிருந்து ஒரு ஒருங்கிணைந்த வழியில் தகவல்களை தருகிறது.

- நிலையான தேடுபொறி அம்சத்தை தவிர வலைவாசல் மின்னஞ்சல், செய்தி, பங்கு விலைகள், தகவல், தரவுத்தளங்கள் மற்றும் பொழுதுபோக்கு போன்ற பிற சேவைகளை வழங்குகின்றன.

Eg:-Yahoo, iGoogle, AQL, Excite, MSN

## *தகவல் தரகர்* (Information broker)

- தகவல் தரகர் என்பது, ஓர் வியாபாரமாகும். அது இணையத்தில் வாடிக்கையாளர் பற்றி பொதுவில் கிடைக்கும் தரவுகளை சேகரித்து பகுப்பாய்வு செய்து, சுருக்கமாக்கி ஏனையவருக்கு அத்தகவல்களை விற்கின்றது.

## *தரவுத்தள சந்தைப்படுத்தல்* (Database marketing)

- ஒரு பொருள், சேவையை மேம்படுத்தும் பொருட்டு தனிப்பட்ட தகவல் தொடர்புகளை உருவாக்குவதற்கு வாடிக்கையாளர்களின் தரவுத்தளங்களை பயன்படுத்தி ஒரு நேரடியான சந்தைப்படுத்தலை மேற்கொள்ளல் ஆகும்.

## *பணக்கொடுப்பனவு வலைவாசல்* (Payment Gateway)

- மின் வியாபாரம், தொடரறா சில்லறை விற்பனையாளர்கள், bricks and clicks, மற்றும் பாரம்பரிய கடை ஆகியவற்றிற்கான கடனட்டை, நேரடிப்பணக் கொடுப்பனவு போன்றவற்றை அங்கீகரிக்கின்ற ஓர் மின் வர்த்தக சேவைப் பிரயோகம் இதுவாகும்.